மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
அ.வ.எண். 100/2024

பெயர் : ராதிகா
சாட்சி – வா.சா–1 நாள்: 03.03.2026

---

**குறுக்கு விசாரணை (பிரதிவாதிகள் தரப்பு)**

1. வாரிசு சான்றிதழ் வழங்க வேண்டும் என்பதற்காக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். எனது மூத்த சகோதரி பெயரி சந்தியா ஆகும். அவர் இந்த வழக்கு நிலுவையில் இருந்த போது கடந்த 2024ம் ஆண்டு நவம்பர் மாதம் 9ம் நாள் காலமாகிவிட்டார். எனது சகோதரியின் வாரிச சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது சகோதரியின் கணவர் 4, 5 ஆண்டுகளுக்கு முன்பு காலமாகிவிட்டார். அவரது இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

2. எனது அப்பாவின் பெயர் அங்கமுத்து ஆகும். அவர் கடந்த 19.02.2017 தேதியில் காலமானார். எனது தாயார் சரஸ்வதி கடந்த 12.08.2014 தேதியில் காலமானார். எனது பெரியப்பாவின் பெயர் ராக்கிமுத்து ஆகும். அவர் 06.05.2022 தேதியில் காலமானார். எனது தாத்தா நாச்சிமுத்துவின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. நாச்சிமுத்துவின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யாமல் நாங்கள் மட்டுமே ராக்கிமுத்துவின் வாரிசுகள் என்று விளம்புகை செய்ய பரிகாரம் எதுவும் கோர முடியாது என்றால் சரியல்ல.

3. ராக்கிமுத்து பெயரில் சொத்து உள்ளதர்கான வருவாய் துறை ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ராக்கிமுத்து இறந்து 2 வருடம் கழித்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். மேற்படி 2 வருடம் காலதாமதமாக தாக்கல் செய்ததற்கான காரணம் ஏதேனும் உள்ளதா என்றால் ஆவணங்களை சேகரிக்க காலதாமதம் ஆகிவிட்டது. நாங்கள் மட்டுமே காலம்சென்ற ராக்கிமுத்துவின் வாரிசுகள் என்று விளம்புகை தாக்கல் செய்வதற்கு இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் போதுமானதாக இல்லை என்றால் சரியல்ல. 1 மற்றும்

2 பிரதிவாதிகள் அரசு ஊழியர்கள் என்பதால் அவர்களுக்கு இந்த வழக்கினை தாக்கல் செய்வதற்கு முன்பாக கொடுக்கப்படவேண்டிய அறிவிப்பு கொடுக்காமல் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2026.03.03 18:28:58 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.